# நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம், | **நகர் மன்ற தலைவர்**
நந்திவரம்–கூடுவாஞ்சேரி | **நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி.**
நாள். 25.01.2023

---

**பொருள் எண். 01**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 10.01.2023ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண்.33553/2022/EA2-SWM-4 உத்தரவில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள் தளவாட சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக தரம் பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியால் குறிப்பிடும் உரமாக்கும் மையம் (MCC/OCC) மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டுவர ஒரு டன்னிற்கு ரூ.402642/– என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின்படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணி மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு 503.85 இலட்சம் செலவாகும் என்பதனால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15th CFC TIED GRANT ஆகியவற்றிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதன் பொருட்டு ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் இதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.–** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 198 /2022/எச்1)
**தீர்மானம் எண். 1**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

**பொருள் எண். 02**

நந்திவரம் கூடுவாஞ்சேரி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குத்தகை இனங்கள் மற்றும் கடைகளை கீழ்கண்ட நாட்களில் கீழ்கண்டவாறு ஏலம் விடப்பட்டதில் உயர்ந்தப்பட்ச ஏலம் கேட்ட நபர்களுக்கு குத்தகை மற்றும் கடைகளுக்கான உரிமத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.78 மற்றும் 92–ன் படி ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அரசாணை எண்.78 நாள்.25.05.2009 (3 ஆண்டுகள் குத்தகை) ஏலம் நாள்.20.01.2023

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் (ம) ஏலத்தொகை(ஆண்டு) | அதிகபட்ச ஏலம் தொகை மற்றும் ஏலம் கேட்டவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் மீன் மார்க்கெட் கட்டண கழிப்பிடம் | திரு.மணிகண்டன் ரூ.120000/–<br>திரு.தினேஷ் ரூ.115000/– | திரு.மணிகண்டன் ரூ.120000/– |
| 2 | தெருவோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | நகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் தொகை (405000) அதிமானதால் ஏலம் கோர யாரும் முன் வரவில்லை | |
| 3 | பேருந்து நிலையத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு.சக்திவேல் ரூ.104000/–<br>திரு.ராமு. ரூ.105000 | திரு.ராமு. ரூ.105000 |

அரசாணை எண்.92 நாள்.03.07.2007(9 ஆண்டுகள் குத்தகை) ஏலம் நாள்.20.01.2023

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் (ம) ஏலத்தொகை (மாதம்) | அதிகபட்ச ஏலம் தொகை மற்றும் ஏலம் கேட்டவர் பெயர் |
|---|---|---|---|
| 4 | கிராம சாலை புதிய கடை எண்.9 | திரு.வி.ஏழுமலை ரூ.1300/–<br>திரு.ராம்கி ரூ.1250/– | திரு.வி.ஏழுமலை ரூ.1300/– |
| 5 | கிராம சாலை புதிய கடை எண்.10 | திரு.ராஜசேகர் ரூ.1500/–<br>திரு.கருணாகரன் ரூ.1400/– | திரு.ராஜசேகர் ரூ.1500/– |
| 6 | கிராம சாலை புதிய கடை எண்.11 | திருமதி.லட்சுமி ரூ.1250/–<br>திரு.பிரபாகர் ரூ.1200/– | திருமதி.லட்சுமி ரூ.1250/– |
| 7 | கிராம சாலை புதிய கடை எண்.12 | திருமதி.சுசிகலா ரூ.1250/–<br>திரு.பிரபாகர் ரூ.1200/– | திருமதி.சுசிகலா ரூ.1250/– |
| 8 | கிராம சாலை புதிய கடை எண்.13 | திரு.கிருஷ்ணமூர்த்தி ரூ.1600/–<br>திருமதி.ராஜீவ்காந்தி ரூ.1500/– | திரு.கிருஷ்ணமூர்த்தி ரூ.1600/– |
| 9 | கிராம சாலை புதிய கடை எண்.14 | திருமதி.ராஜீவ்காந்தி ரூ.1600/–<br>திரு.கிருஷ்ணமூர்த்தி ரூ.1500/– | திருமதி.ராஜீவ்காந்தி ரூ.1600/– |
| 10 | **APAMT கடைகள் 1** | திரு.சுரேந்தர் ரூ.7200/–<br>திரு.தினேஷ் ரூ.6900/–<br>திரு.பாலமுருகன் ரூ.7100/– | திரு.சுரேந்தர் ரூ.7200/– |
| 11 | **APAMT கடைகள் 2** | திரு.சரவணவேல் ரூ.7500/–<br>திரு.அன்சாரி ரூ.7300/–<br>திரு.ராமு ரூ.7400/– | திரு.சரவணவேல் ரூ.7500/– |
| 12 | **APAMT கடைகள் 3** | திருமதி.அனிதா ரூ.7900/–<br>திரு.அன்சாரி ரூ.7700/–<br>திரு.கார்த்தி ரூ.7800/– | திருமதி.அனிதா ரூ.7900/– |

| | | | |
|---|---|---|---|
| 13 | **APAMT** கடைகள் 4 | திருமதி.மெஹருன்னிசா ரூ.7800/–<br>திரு.டி.வெங்கடேசன் ரூ.7500/–<br>திரு.ரூபன் ரூ.7700/–<br>திரு.கார்த்தி ரூ.7200/–<br>திரு.லோகேஷ் பாண்டியன் ரூ.7300/– | திருமதி.மெஹருன்னிசா<br>ரூ.7800/– |
| 14 | **APAMT** கடைகள் 5 | திருமதி.கண்ணன் ரூ.7200/–<br>திரு.ஆனந்த் ரூ.7000/– | திருமதி.கண்ணன் ரூ.7200/– |
| 15 | **APAMT** கடைகள் 6 | திருமதி.கவிதா ரூ.3800/–<br>திரு. பாலமுருகன் ரூ.3400/–<br>திரு.சக்திவேல் ரூ.3600/–<br>திரு.ஆனந்த் ரூ.3200/– | திருமதி.கவிதா ரூ.3800/– |
| 16 | **APAMT** கடைகள் 7 | திரு.ராமு ரூ.3100/–<br>திரு.விக்னேஷ்வர பாண்டியன்<br>ரூ.2800/–<br>திரு.சக்தி வேல் ரூ.3000/– | திரு.ராமு ரூ.3100/– |
| 17 | **APAMT** கடைகள் 8 | திரு.கனகராஜ் ரூ.3200/–<br>திரு.கார்த்தி ரூ.2200/–<br>திரு.ஜெகன் ரூ.3100/– | திரு.கனகராஜ் ரூ.3200/– |
| 18 | **APAMT** கடைகள் 9 | திரு.முகம்மது முஸ்தப்பா ரூ.3100/–<br>திரு.ஆனந்த் ரூ.3000/– | திரு.முகம்மது முஸ்தப்பா<br>ரூ.3100/– |
| 19 | **APAMT** கடைகள் 10 | திரு.கார்த்தி ரூ.3000/–<br>திரு.பிரபாகரன் ரூ.2950/– | திரு.கார்த்தி ரூ.3000/– |
| 20 | **APAMT** கடைகள் 11 | திரு.வெங்கடேசன் ரூ.3000/–<br>திரு.கனகராஜ் ரூ.2700/–<br>திரு.ஆனந்த் .2800/– | திரு.வெங்கடேசன் ரூ.3000/– |
| 21 | **APAMT** கடைகள் 12 | திரு.முகமது யுதுப் ரூ.7900/–<br>திரு.பாலமுருகன் ரூ.7600/– | திரு.முகமது யுதுப் ரூ.7900/– |
| 22 | **APAMT** கடைகள் 13 | திருமதி. தமிழ்செல்வி ரூ.7900/–<br>திரு.சக்திவேல் ரூ.7800/–<br>திரு.முபாராக் ரூ.7500/–<br>திரு.கனகராஜ் ரூ.7600/– | திருமதி.தமிழ்செல்வி ரூ.7900/– |
| 23 | **APAMT** கடைகள் 14 | திருமதி.சசிகலா ரூ.7800/–<br>திரு.ஆனந்த் ரூ.7600/–<br>திரு.சக்திவேல் ரூ.6200/–<br>திரு.பெர்னால்டஸ் ரூ.7500/–<br>திரு.விநாயக் ரூ.7400/– | திருமதி.சசிகலா ரூ.7800/– |
| 24 | **APAMT** கடைகள் 15 | திருமதி.அஸ்வதி ரூ.7600/–<br>திரு.விக்னேஷ் ரூ.7400/– | திருமதி.அஸ்வதி ரூ.7600/– |
| 25 | **APAMT** கடைகள் 16 | திரு.முகமது இஸ்மாயில் ரூ.3900/–<br>திரு.ஆனந்த் ரூ.3800/– | திரு.முகமது இஸ்மாயில்<br>ரூ.3900/– |

| | | | |
|---|---|---|---|
| 26 | APAMT கடைகள் 17 | திரு.நரேஷ் பாபு ரூ.3300/–<br>திரு.கார்த்தி ரூ.3200/– | திரு. நரேஷ் பாபு ரூ.3300/– |
| 27 | APAMT கடைகள் 18 | திருமதி.சுமதி ரூ.3800/–<br>திரு.கார்த்தி ரூ.3500/–<br>திரு.ராமு ரூ.3200/– | திருமதி.சுமதி ரூ.3800/– |
| 28 | APAMT கடைகள் 19 | திரு.பாலமுருகன் ரூ.3600/–<br>திரு.ராமு ரூ.3500/– | திரு.பாலமுருகன் ரூ.3600/– |
| 29 | வணிக வளாகம் (கறிக்கடைகள்)கடை எண்.9 | திரு.எஸ்.கோபிநாத் ரூ.1200<br>திரு.டில்லிபாபு ரூ.1100/– | திரு.எஸ்.கோபிநாத் ரூ.1200 |
| 30 | வணிக வளாகம் (கறிக்கடைகள்)கடை எண்.11 | திரு.நரேஷ் குமார் ரூ.1400/–<br>திரு.கோபிநாத் ரூ.1200/– | திரு.நரேஷ் குமார் ரூ.1400/– |

அலுவலக குறிப்பு:-

1. உயர்ந்த பட்ச ஏலம் கேட்ட குத்தகை தாரர்களுக்கு அரசாணை எண்.78 நாள்.25.05.2009 மற்றும் அரசாணை எண்.92 நாள்.03.07.2007 –ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி மேற்கண்ட குத்தகையை 01.02.2023 முதல் ஒப்படைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உயர்ந்த பட்சம் ஏலம் கேட்ட குத்தகை தாரர்களின் டேவணி தொகை மற்றும் 12 மாதம் வாடகையை நகராட்சி கணக்கில் வைத்துக்கொண்டு ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படாத நபர்களுக்கு அவரவர்கள் செலுத்திய டேவணி தொகையை திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஏலம் போகாத தினசரி அங்காடி சுங்கம் வசூலிக்கும் உரிமம் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.727/2022/அ1**

**தீர்மானம் எண். 2**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

**பொருள் எண். 03**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – உள்ளாட்சி நகர்மன்ற உறுப்பினர் தேர்தல்–2022 இந்நகராட்சி அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.08.12.2021–ன் படி நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று முடிவுற்றுள்ளது. இதன் காரணமாக அனைத்து 30/ வார்டுகளிலும் Video Graphing, Live Web Streaming and CCTV Arrangements at polling Stations, Counting Halls, Counting Premises, Strong Room, Control

Room, DEO Office, Reforming officer and Assistant Reforming officer (ARO) Officer போன்ற இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிகள் அணைத்தும் செங்கல்பட்டு மண்டலத்திலுள்ள நகராட்சிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.தற்போது மொத்த ரூ.10,46,747.32–ல் ரூ.5,76,347.20 ரூபாய் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பட்டியலில் உள்ளபடி நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி சார்பில் ரூ.470400.12/– தொகை செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி தொகையினை ஆணையர் (ம) நகரமன்ற தலைவரின் வழங்கிட மன்றத்தில் பதிவு செய்து அனுமதி பெறவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ–கு:**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

**பொருள் எண். 04**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி–குடிநீர் பிரிவு–இந்நகராட்சிக்குட்பட்ட 30/வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்திட இந்நகரமன்ற தீர்மான எண்–19, நாள்.31.03.2022–ல் தனியார் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்திட மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக இந்நகரமன்ற தீர்மான எண்–37, நாள்.11.04.2022–ல் 5/ எண்ணிக்கையிலான கூடுதல் டேங்கர் லாரி மூலம் தலா ஒரு வாகனத்திற்கு ரூ.7.00/ இலட்சம் என மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 01.06.2022–ல் கோரப்பட்டு கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு ஜீன்–2022 முதல் பட்டியல் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஆகஸ்ட்டு–2022 வரையில் பட்டியல் வழங்கப்பட்டு செப்டம்பர்–2022 குடிநீர் விநியோக பட்டியல் வழங்கிட கூடுதலாக தொகை வழங்க இந்நகரமன்ற தீர்மான எண்.81, நாள்.31.10.2022–ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும், பணியின் அவசியம் கருதி அனுமதி பெற்று கூடுதலாக ரூ.2.00/– இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நவம்பர்–2022 வரையில் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குடிநீர் பணியின் அவசியம் கருதி கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு கூடுதலாக தலா ரூ.3.00/– இலட்சம் மன்றம் அனுமதி பெறப்பட்டு ஜனவரி 2023 வரையில் குடிநீர் அவசியம் கருதி பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எதிர் வரும் கோடை வறட்சியினை சமாளிக்க கீழ்க்கண்ட பணிகளுக்கு மேலும் கூடுதலாக தலா 5.00/இலட்சம் வழங்கிட கீழ்க்கண்டுள்ளவாறு பணிகளின் விவரம் அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் |
|---|---|
| 01 | வார்டு எண்–2,3 மற்றும் 4 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |

| | |
|---|---|
| 02 | வார்டு எண்–15,16 மற்றும் 23 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |
| 03 | வார்டு எண்–24,25 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |

மேற்கண்ட அட்டவணையின்படி சம்மந்தப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கு ஆணையரின் அனுமதியும் நகர மன்ற தலைவரின் அனுமதியும் பெற்று கூடுதல் தொகை ரூ.5.00/– இலட்சம் குடிநீர் தேவையின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ–கு:**நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 4**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

**பொருள் எண். 05**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகள், தனியார் மூலம் ஆட்கள் வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர் பொது நலன் கருதி துரித வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் மேற்காணும் பொது சுகாதார பணிகளுக்குண்டான ஒப்பந்தப்பணிகள் மார்ச்–31–2022ல் முடிவடைந்தது. நகர்புற உள்ளாட்சி தேர்தல் முடிந்து நகரமன்ற கூட்டம் நடைபெற்ற குறுகிய காலத்தில் புதிய ஒப்பந்த புள்ளி கோர இயலாத சூழ்நிலை இருந்ததால் தூய்மைப்பணியின் தொடர் அவசியம் மற்றும் இதர பணிகளின் அவசியம் கருதி , தற்போது ஒப்பந்த பணி மேற்கொண்டு வரும் கீழ்காணும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கிய அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள நகரமன்ற ஒப்புதலுடன் ஏப்ரல், மே மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது கீழ்காணும் பணிகளுக்கு புதிய ஒப்பந்த புள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் உரிய அனுமதி வழங்க கோரி முன் மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் பொது சுகாதார பணி மற்றும் இதர பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக இயக்குநர் வழங்கிய அறிவுரையின் படி, உரிய அனுமதி பெற்று புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை பணியின் அவசியம் கருதி ஆகஸ்டு – 2022 , செப்டம்பர்– 2022 மற்றும் அக்டோபர்–2022 ஆகிய மாதங்களுக்கு இந்நகரமன்ற தீர்மான எண். நாள்: 01.08.2022ல் அனுமதி வழங்கப்பட்டு கீழ்க்கண்ட வ.எண். 01 முதல் 09 வரையுள்ள பணிகளுக்கு மேலும் காலநீட்டித்து நவம்பர் – 202 முதல் ஜனவரி 2023 வரை பணி மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, புதிய ஒப்பநத்ப்புள்ளி கோர நிர்வாக

காரணங்களால் காலதாமதம் ஆவதால் மேலும் பிப்ரவரி – 2023 (ம) மார்ச் – 2023 ஆகிய இரு மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி நீட்டிப்பு காலம் |
|---|---|---|---|
| 01 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.01 முதல் 12 வரையிலான வீடுகளில் வீடுவீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம்பிரித்து வாங்குதல் பணி செய்தல் | DUDS Pvt.Ltd | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 02 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பழைய வார்டு எண்.13 முதல் 18 வரையிலான வீடுகளில், வீடு வீடாக மக்கும் குப்பை, மக்காத குப்பை தரம் பிரித்து வாங்குதல், எருவாக்குதல் பணி செய்தல் | Green City Social Service Society | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 03 | Out Sourcing of 55 Nos of Non power for Dengu Breathing control Activities for 30 day at Nandivaram-Guduvancheri Municipality | Bluee Gold Solutions | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 04 | Outsourcing of 41-Nos of Non Power for Computer Operation, Office Assistant, Driver, Street Light Maintenance, Water Supply Maintenance and Cleanliness work for 30- days at Nandivaram-Guduvancheri Municipality. | Bluee Gold Solutions | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 05 | ஆண்டு ஒப்பந்தம்–நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி –2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள் மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.10 முதல் 18 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தபடி மேற்கொள்ளுதல். | M/s. குமரன் எலக்ட்ரிகல்ஸ் | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |

| | | | |
|---|---|---|---|
| 06 | ஆண்டு ஒப்பந்தம் – நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி – 2021–22ஆம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவில் ஏற்படும் பழுதுகள், மோட்டார், சிறு மின் விசை பம்பு உடைப்புகள், கை பம்புகள் வார்டு எண்.01 முதல் 09 வரை பழுது பார்த்தல் பணிக்கு ஆண்டு ஒப்பந்தப் பணி மேற்கொள்ளுதல் | திரு.L. புன்னியகோட்டி | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 07 | ஜே சி பி வாகனம் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 08 | திடக்கழிவுகள் அகற்றுவதற்க்காக டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |
| 09 | குப்பை வடிகால் கழிவு மண் அகற்றுதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாடகை டிராக்டர் பணிக்கு | T.Sundaram Tractor | இரண்டு மாதகாலம் (பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023) |

அலுவலக குறிப்பு–

மேற்க்கண்ட வ.எண்.01 முதல் 09 வரையிலான பராமரிப்பு ஒப்பந்தப்பணிகள் பழைய விலை விகிதத்திலேயே ஒப்பந்த கால நீட்டிப்பு ஆனது நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 5**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

பொருள் எண். 06

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி – பொது சுகாதார பிரிவு – நகர்மன்ற தீர்மான எண் 98, நாள். 31.10.2022 ன் படி இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் கொள்முதல் செய்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 30.11.2022 மாலை 4.00 மணி வரை இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது அதன் விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண். | சப்ளை செய்ய வேண்டிய கிருமி நாசினி | சங்கனாக் என்டர்பிரைசஸ் | சன் என்டர்பிரைசஸ் |
|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு தூள் | ரூ. 9/– | ரூ. 11/– |
| 2. | பிளீச்சிங் பவுடர் | ரூ. 40/– | ரூ. 43/– |
| ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | | குறைவு | அதிகம் |

வரப்பெற்ற மேற்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு கிருமிநாசினிகள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய சங்கனாக் என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், பில்பட்டியல் வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 6**

**பொருள் எண். 07**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – குடிநீர் பிரிவு – இந்நகராட்சிக்குட்பட்ட 30/வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்திட இந்நகரமன்ற தீர்மான எண்– 19, நாள்.31.03.202–ல் தனியார் டேகர் லாரி மூலம் குநீர் விநியோகம் செய்திட மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக இந்நகரமன்ற தீர்மான எண்.– 37, நாள்.11.04.2022–ல் 5/எண்ணிக்கையிலான கூடுதல் டேங்கர் லாரி மூலம் தலா ஒரு வாகனத்திற்கு ரூ.7.00/இலட்சம் என மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 01.06.2022–ல் கோரப்பட்டு கீழ்க்கண்டுள்ள பணிக்கு டிசம்பர் –2022 வரையில் பட்டியல் வழங்கப்பட்டு தற்போது 82500/– மட்டும் இருப்பு தொகையுள்ளது. எனவே, பணியின் அவசியம் கருதி மேலும், கூடுதலாக இப்பணி மேற்கொள்ள ரூ.3.00/– இலட்சம் ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் |
|---|---|
| 01 | வார்டு எண்– 9,10 மற்றும் 11 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |

அ.கு . மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 7**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

**பொருள் எண். 08**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி – குடிநீர் பிரிவு – இந்நகராட்சிக்குட்பட்ட 30/வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்திட இந்நகரமன்ற தீர்மான எண்–19, நாள்.31.03.2022–ல் தனியார் டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்திட மன்றம் அனுமதி வழங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக இந்நகரமன்ற தீர்மான எண்–37, நாள்.11.04.2022–ல் 5/ எண்ணிக்கையிலான கூடுதல் டேங்கர் லாரி மூலம் தலா ஒரு வாகனத்திற்கு ரூ.7.00/ இலட்சம் என மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 01.06.2022–ல் கோரப்பட்டு கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு ஜீன்–2022 முதல் பட்டியல் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஆகஸ்ட்டு–2022 வரையில் பட்டியல் வழங்கப்பட்டு செப்டம்பர்–2022 குடிநீர் விநியோக பட்டியல் வழங்கிட கூடுதலாக தொகை வழங்க இந்நகரமன்ற தீர்மான எண்.81, நாள்.31.10.2022–ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும், பணியின் அவசியம் கருதி அனுமதி பெற்று கூடுதலாக ரூ.2.00/– இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நவம்பர்–2022 வரையில் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், குடிநீர் பணியின் அவசியம் கருதி கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு கூடுதலாக தலா ரூ.3.00/– இலட்சம் வழங்கிட கீழ்க்கண்டுள்ளவாறு பணிகளின் விவரம் அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் |
|---|---|
| 01 | வார்டு எண்–2,3 மற்றும் 4 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |
| 02 | வார்டு எண்–15,16 மற்றும் 23 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |
| 03 | வார்டு எண்–24,25 வரை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாடகை டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் (7.00/இலட்சம்) |

மேற்கண்ட அட்டவணையின்படி சம்மந்தப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கு ஆணையரின் அனுமதியும் நகர மன்ற தலைவரின் அனுமதியும் பெற்று கூடுதல் தொகை ரூ.3.00/– இலட்சம்வழங்கிட அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ–கு:**நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 8**

மன்றம் அனுமதி வழங்கப்படுகிது.

ஓம்/M.K.D. கார்த்திக்
நகர்மன்ற தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி